1982 பிப்ரவரி 4]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த மேல் மணிமுத்தாறு திட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அந்தப் பக்கத்தில் சிங்கவால் குரங்குகள் இருப்பதனால் தடை ஏதோ இருப்பதாக வன இலாகா தடை செய்திருந்ததே, தற்போது அதற்கு வன இலாகா சம்மதத்தை அளித்திருக்கிறதா? இந்தத் திட்டத்தை விரைவாக முடிப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க எண்ணி உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வனத் துறையினர் இந்தத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளைச் செய்வதற்குத் தங்கள் ஒப்புதலை அளித்துள்ளனர். அதன் பேரில் எஞ்சிய ஆய்வுப் பணிகளை இப்பொழுது மின்சார வாரியம் மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்திற்குக் கேரள அரசால் வழங்கப்படும் மின்சாரம்

*வினா எண். 23—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்குக் கேரள அரசு தற்பொழுது கொடுக்கும் மின்சாரத்தின் அளவை அதிகரித்துக் கொடுக்கும் வாய்ப்பு உள்ளதா?

(ஆ) தற்பொழுது நாளொன்றுக்கு எவ்வளவு யூனிட் மின்சாரம் கேரள அரசு தமிழக அரசுக்குக் கொடுக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தற்பொழுது கேரள மின்வாரியம் 1981-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு நாளொன்றுக்குச் சராசரியாக 3 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் வழங்கி வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கேரளத்திலிருந்து நாம் பெறும் மின்சாரத்தின் விலையை அதிகரிக்க வேண்டும் என்று கேரளத்தில் அமைந்துள்ள புதிய அரசு கேட்டுள்ளதா? அப்படியானால், கேரள அரசிலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலையும் கர்நாடகத்திலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலையும் எந்த வகையில் வித்தியாசப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கர்நாடகத்திலிருந்து நாம் மின்சாரம் வாங்குவது இல்லை. சொல்லப்போனால், கர்நாடகமும் நாமும் கேரளத்திலிருந்து தான் மின்சாரத்தை வாங்குகிறோம். கேரளத்திலிருந்து நாம் வாங்கும் மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 28 பைசா ஆகிறது. ஆனால் 3 ஆண்டுகளுக்கு முன்னால் இது 18 பைசா என்று இருந்தது. ஒரு 5 ஆண்டுகளுக்கு முன்னால் இது யூனிட்டுக்கு 12 பைசா என்று கூட இருந்தது. அதற்கு இப்போது நாம் 28 பைசா வீதம் கொடுத்து வருகிறோம். அதிகரிக்க வேண்டும் என்று கேரள அரசு கேட்பதாகக் கர்நாடக அரசோடு பேசுகிறபோது விவரங்கள் வந்திருக்கின்றன. நாம் இன்னும் இதுபற்றி கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நிலக்கரிப் பற்றாக்குறையினால் அவ்வப்போது மின் உற்பத்தியில் தடங்கல் ஏற்படுவதால் நிலக்கரிச் சுரங்கத்தில் பங்கு கேட்கும் உத்தேசம் தமிழகத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தப் பெரிய கேள்வியை தனிக் கேள்வியாகப் போடும்படி உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்திலிருந்து கொடுக்கப்படும் மின்சாரத்தை நாம் எடுத்துக் கொண்டு வருவதற்குக் கூட சரியாக லைன்கள் இல்லை என்று சொல்கிறார்களே அது வாஸ்தவமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எவ்வளவு கொடுத்தாலும் எடுத்துக் கொள்வதற்கு லைன்கள் இருக்கின்றன.

(முற்பகல் 9-10)

நீலகிரி மாவட்டத்தில் தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்கும் திட்டம்

*வினா எண். 24—திரு. கே. கல்லன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது தொடங்கப்படும்?